අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**



COVID - 19 தொற்றுநோய்ப் பரவல் நிலைமையின் கீழ்

# சுகாதாரப் பாதுகாப்பின் அடிப்படையில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைக் கோவை 2021

பாடசாலை சுகாதாரம் மற்றும் போசணை கிளை
பாடசாலை நடவடிக்கைகள் பிரிவு
கல்வி அமைச்சு

# கொவிட் - 19 தொற்றுப் பரவல் நிலைமையின் கீழ் சுகாதாரப் பாதுகாப்புடன் பாடசாலைகளை ஆரம்பித்தல்

## பாடசாலை அதிபர்களுக்கான அறிவுறுத்தல்கள்

பாடசாலை ஆரம்பம் -: 2021 ஒக்டோபர் 21ஆந் திகதியிலிருந்து 4 கட்டங்களாக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது

**கட்டம் 01:** மொத்த மாணவர் தொகை 200க்கு குறைவான பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகள்.

**கட்டம் 02**: மொத்த மாணவர் தொகை 200க்கு அதிகமான பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகள் மற்றும் மாணவர் தொகை 100க்கு குறைவான பாடசாலைகளின் சகல வகுப்புகள்

**கட்டம் 03**: சகல பாடசாலைகளினதும் தரம் 10,11,12 மற்றும் மாணவர் தொகை 200 க்கு குறைந்த பாடசாலைகளின் சகல வகுப்புகள்

**கட்டம் 04**: ஏனைய தரங்களுக்கான பாடசாலைகள் ஆரம்பிக்கப்படல்

அந்தந்த தரங்களுக்கான பாடசாலைளை ஆரம்பிக்கும் திகதிகள் பற்றிய விபரங்கள் செயலாளரினால் பின்னர் அறிவிக்கப்படும்.

## பாடசாலை ஆரம்பிப்பதற்கான முன்னாயத்தங்கள்

- கல்வி அமைச்சினால் அறிவிக்கப்படும் பாடசாலைகள் அவை ஆரம்பிக்கப்படும் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் பாடசாலை வளாகத்தில் கொவிட் 19 பரவலை தடுப்பதற்காக மாகாண, வலய சுகாதார மேம்பாட்டுக் குழுக்களின் மேற்பார்வையின் கீழ் பாடசாலை சுகாதார மேம்பாட்டுக்குழு, பாடசாலை அபிவிருத்தச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களின் பங்களிப்புடன் பாடசாலைகளை தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளை செய்தல் வேண்டும்.

- கொவிட் –19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் பாடசாலை ஆசிரியர்கள், பணியாளர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறை தொடர்பாக பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி / பொதுச் சுகதார பரிசோதகரை அழைத்து அனைவருக்கும் அறியப்படுத்தல்.

- தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள், ஊழியர்கள் இருப்பின் அவர்களை தடுப்பூசி பெற்றுக்கொள்ளத் தூண்டுவதுடன், தடுப்பூசி சான்றிதழ் அதிகாரிகளினால் கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றைக் காண்பிக்குமாறு ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்.

- 15/2020 இலக்க கோவிட் 19 பரவலைத் தடுப்பதற்காக பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை தயார்படுத்தல் தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கோவையின் பக்கம் 18 இன் (பின்னிணைப்பு 1) கீழ் தரப்பட்டுள்ள மதிப்பீட்டு படிவத்துக்கு அமைய பாடசாலைகளை தயார் செய்து, அம்மதிப்பீட்டு படிவத்தின் பிரதியொன்றை கோட்டக்கல்வி காரியாலயத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

- பாடசாலைகளில் சகல கல்வி மற்றும் கல்விசார ஊழியர்களும் தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளமை பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரதியொன்று கோட்டக்கல்வி காரியாலயத்துக்கு வழங்குதல் வேண்டும்.

## பாடசாலை ஆரம்பித்ததன் பின்னர் சுகாதாரப் பாதுகாப்பான முறையில் பாடசாலையை நடாத்துதல்

- நீண்ட நாட்களுக்கு பின்னர் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களை இனிதாக வரவேற்பதுடன், அவர்களின் உளவியல் நிலைய உயர்த்துவதற்கு உளவியல் சுகாதார செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

- வீட்டில் இருந்த காலப்பகுதியில் நிகழ்நிலை கற்றல் தொடர்பாக மாணவர்களை வினவாதிருத்தல். இலகுவான மட்டத்திலிருந்து கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு சகல ஆசிரியர்களையும் அறிவுறுத்தல்.

- எப்போதும் மாணவர்கள் மத்தியில் சாந்தமான மனநிலையைப் பேணுவதை உறுதி செய்வதற்காக உளவிழிப்புணர்வு அபிவிருத்தி செயற்பாடுகளை (Mindfulness Activities) நடைமுறைப்படுத்தல்.

- பாடசாலைக்கு வரும்போதும், பாடசாலையில் இருக்கும்போதும் மற்றும் பாடசாலையிலிருந்து வெளிச்செல்லும் வழியில் முகக்கவசம் அணிவதைக் கட்டாயப்படுத்தல்.

- பாடசாலைக்குள் நுழையும் போது சகல மாணவர்களதும் உடல் வெப்பநிலையை பரிசோதனை செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் வகுப்பறையில் உடல் வெப்பநிலையை மீண்டும் பரீட்சித்தல்.

- மாணவர்கள் பாடசாலையினுள் நுழையும்போது கைகளைக் கழுவுவதை கட்டாயப்படுத்தல் மற்றும் அச்செயற்பாடு சரியாக மேற்கொள்ளப்படுகின்றதா என தினமும் மேற்பார்வை செய்தல்.

- மாணவர்களுக்கிடையில் சமூக இடைவெளி பேணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

- மாணவர்கள் ஒன்றுகூடுவதைத் தடுப்பதற்காக வகுப்பு மட்டத்தில் பொருத்தமான நேரத்தில் இடைவேளை வழங்குதல்.

- வீட்டிலிருந்து கொண்டுவரும் உணவு, நீர் மற்றும் ஏனைய உபகரணங்களை பகிர்ந்து கொள்வதை தடுத்தல்.

- உணவுவேளையின்போது முகக்கவசத்தை கழற்றுவதால் மாணவர்கள் மத்தியில் இடைவெளியைப் பேணுதல். உணவு இடைவேளை நேரத்தைக் குறைத்தல்.

- ஒருவருக்கொருவர் ஸ்பரிசம் செய்யும்படியான விளையாட்டுக்களில் ஈடுபடுவதனை தவித்தல் மற்றும் உடற்பயிற்சி செயற்பாடுகளை சமூக இடைவெளி பேணி நடாத்துதல்.

- அவசர நிலைமையின் போது தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தகவல்களை சேகரித்து அலுவலகத்தில் காட்சிப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக ஊழியர்களை தெறியப்படுத்தல்.

- கொவிட் 19 நோய்யறிகுறி காணப்படும் பிள்ளையொன்று இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் அவரை நோயாளர் அறைக்கு அனுப்பி உடனடியாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியூடாக வலய மட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும் பிள்ளை நோய்.். சரும நோய் தொடர்பான வைத்திய நிபுணரிடத்தில் காண்பித்தல் வேண்டும் (பின்னிணைப்பு 3) பிள்ளைக்கு அவசர சிகிச்சை தேவை என உணரும் சந்தர்ப்பத்தில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

- சகல கல்வி வலயத்துக்கும் சிறுவர் நோய் விஷேட வைத்தியர் ஒருவரை நியமிப்பதற்கு சிறுவர்நோய் விஷேட வைத்தியர்களின் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமையால், அவர்களைத் தொடர்புகொண்டு தேவையான தயவல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பிள்ளைகளை காண்பித்தல் வேண்டும். மேலும் குறித்த வைத்தியர்களின் தொலைபேசி இலக்கங்களை காட்சிப்படுத்தல் வேண்டும்.

- பாடசாலை அதிபரின் தலைமையில் பாடசாலையின் சுகாதார மேம்பாட்டுக் குழுவை செயற்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் கோவிட் 19 தொற்றுநோய் பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஊழியர்களுக்கு பொறுப்புக்களை வழங்குதல்.

- பாடசாலைகளை சுகாதார பாதுகாப்பன இடமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பெற்றோர், பாடசாலை சமூகத்தின் மத்தியில் அதுதொடர்பான நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.

- பாடசாலைகளை நடாத்திச் செல்லும்போது சுகாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்யும் மதிப்பீட்டு ஆவணங்களை சரியாக பேணிவருதல். (பின்னிணைப்பு 02)

- காய்ச்சல், மூச்சுக்கோளாறுகள் காணப்படும் பிள்ளைகள்/ தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகள்/ கொவிட் நோய் பரிசோதனை செய்யப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளை சுகாதார வழிகாட்டல்கள் கிடைக்கும்வரை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என பெற்றோரை அறிவுறுத்தல்.

- மாணவர்களின் உள நலத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- கொவிட் 19 வைரஸ் தொடர்பான ஏதேனும் ஒரு நிலைமை காரணமாக வீட்டில் தங்கியிருக்கும் மாணவர்களின் அன்றாட கற்றல் நடவடிக்கைகளில் தடையின்றி ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுத்தல்.

- மாணவர்களை உயிர் பாதுகாப்பு குமிழி முறைமைக்கு அமைய பாடசாலைக்கு அழைத்தல் வேண்டும். (ஒரே மாணவர் குழு ஒரே நாளில் சந்திக்குமாறு அழைத்தல்)

- மாணவர்களை எப்போதும் பாராட்டுவதினூடாக அவர்களை உளரீதியாக வலுவூட்டுதல்

## கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையில் சுகாதாரப் பாதுகாப்பாக பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான விரிவான அறிவுரைகள்

நாட்டின் எதிர்காலம் பிள்ளைகளே ஆவர். அவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைவதால் நாடென்ற வகையில் இந்த நாட்டின் அபிவிருத்தியை பல வருடங்களுக்கு பின்தள்ளிவிடும் ஆகவே கொவிட் -19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்தி பிள்ளைகளைப் பாதுகாத்து புதிய இயல்புநிலையின் கீழ் பாடசாலைகளை சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளை நடாத்திச் செல்லும்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகள் தொடர்பாகக் கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

**முன்னாயத்த நடவடிக்கைகளின்போது கூடுதலாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

- பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான முன்னாயத்தங்களை செய்தல் மற்றும் அதற்காக திட்டமிடல் மற்றும் உபாய திட்டமொன்றைத் தயாரித்தல்.
- பாடசாலைக்குள் நுழையும்போது கைகளைக் கழுவும் வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் இருக்கும் கை கழுவும் இடங்களைப் பயன்படுத்த ஏற்றவாறு தயார்படுத்தல்
- தொடர்ச்சியாக நீரை பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- டெங்கு நோய் பரவுதலைத் தவிர்ப்பதற்காகப் பாடசாலை சூழலைத் துப்பரவு செய்தல் மற்றும் நீர் தேங்கும் இடங்களை அகற்றுதல்
- மலசல கூடங்களைத் துப்பரவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்
- கிருமித் தொற்று நீக்கல் திரவம், சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவற்றைப் போதுமான அளவு வழங்குதல். தேவைப்படும்போது அவற்றை வழங்குவதற்கான பொறுப்பை ஆசிரியர் ஒருவரிடம் ஒப்படைத்தல்.
- பாடசாலைச்சூழல், வகுப்பறைகளைத் துப்பரவு செய்தல் மற்றும் மேசை, கதிரை என்பனவற்றைத் தொற்றுநீக்கித் துப்பரவு செய்தல்.
- கொவிட் -19 தொற்றுநோய் நிலையின் கீழ் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் செயற்பட வேண்டிய விதம் குறித்து பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி/ பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை அழைத்து தெளிவுபடுத்தல்

## சுகாதாரப் பாதுகாப்பான முறையில் பாடசாலையை நடாத்துவதற்கு கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்

- பாடசாலைக்கு மாணவர்கள் வரும்போதும், பாடசாலையில் இருக்கும்பொதும், பாடசாலையிலிருந்து வெளிச்செல்லும் வழியிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமானது என பிள்ளைகளுக்கு அறியச் செய்தல் மற்றும் அவை நடைமுறைபடுத்தப்படுவது தொடர்பாக கண்காணித்தல்

- பாடசாலைக்குள் நுழையும்போது அனைத்து மாணவர்கள்/ ஊழியர்களின் உடல் வெப்பத்தை சோதித்து இயல்பான வெப்பநிலை காணப்படின் ($37^0c$) பாடசாலைக்குள் அனுமதித்தல் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் குறித்த அளவை விட உடல் வெப்பம் கூடுதலாக இருப்பின் குறித்த மாணவர்/ஊழியரை ஓய்வறைக்கு அனுப்பி மீண்டும் உடல் வெப்பநிலையைச் சோதித்த பின்னர் சுகாதார வைத்திய அதிகாரி/ பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு தெரியப்படுத்தி அறிவுரையைப் பெறுதலும் பெற்றோருக்கு தெரியப்படுத்தலும்.

- மாணவர்கள் பாடசாலைக்குள் வரும்போது கைகளைக் கழுவுவதை கட்டாயமாக்கிப் பாதணிகளைக் தொற்றுநீக்குதல் மற்றும் அவை உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதை தினமும் கண்காணித்தல்.

- மாணவர்கள் பாடசாலைக்குள் வரும்போதும் பாடசாலையிலிருந்து வெளிச்செல்லும் போதும் ஏற்படும் நெரிசலைத் தவிர்ப்பதற்காகப் பாடசாலையிலுள்ள மேலதிக நுழைவாயில்களை மாணவர்கள் உள்ளே வருவதற்கும் வெளிச்செல்லவும் பயன்படுத்தல்

- பாடசாலையில் மாணவர்கள் ஒன்றுகூடுவதை குறைக்கும் வகையில் அதனை முகாமைத்துவம் செய்வதற்காக அதிபரின் தலைமையில் மேற்பார்வை வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்

- அனைத்துப் பாடசாலைகளிலும் குறைந்தபட்சம் ஒரு பாதுகாப்பு உடைத்தொகுதி மற்றும் முகக்கேடயம் (Face Shield)வைத்திருத்தல்

- மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப அவசரத் தேவையின்போது பயன்படுத்துவதற்காக மேலதிக முகக்கவசங்களை கையிருப்பில் வைத்திருத்தல்.

- பாடசாலையில் கொவிட் 19 நோய் அறிகுறிகளோடு பிள்ளையொருவரைக் காணுமிடத்து அப்பிள்ளையை ஓய்வு அறையில் வைத்திருப்பதுடன், மேலதிக அறிவுறுத்தல் மற்றும் சிகிச்சைக்காக சுகாதார வைத்தியர்களினூடாக வலய மட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும் பிள்ளை நோய/ சரும நோய் தொடர்பான வைத்திய நிபுணரிடம் காண்பித்தல் வேண்டும். (இணைப்பு 02) பிள்ளைக்கு அவசர சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில் உடனடியாக வைத்தியசாலையில் அனுபமதிப்பதுடன், அது தொடர்பாக பிரதேச சுகாதார வைத்தியருக்கு தெரியப்படுத்தல் வேண்டும். மேலும் அது குறித்து பெற்றோருக்கு தெரியப்படுத்துவதுடன், அம்மாணவன் அல்லது மாணவி பூரண சுகமடைந்ததன் பின்னரே பாடசாலைக்கு வர அனுமதிக்க வேண்டும்.

- இடைவெளியைப் பேணி செய்யக்கூடிய உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்துதல், ஏற்புடைய உணவை உட்கொள்ள ஊக்குவித்தல் மற்றும் புகைத்தல், மதுசாரம், போதைப்பொருள் பாவனையைத் தவிர்க்க மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். இவை நாட்பட்ட தொற்றா நோய்களைத் தவிர்க்க ஏதுவாகும்.

- பாடசாலை ஆரம்பித்த பின்னர் வெளிநபர்கள் பாடசாலைக்குள் வருவதை இயலுமான அளவு தவிர்த்துக்கொள்வதோடு அவ்வாறு பாடசாலையோடு தொடர்புபடும் வெளிநபர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தைக் குறிக்கும் ஆவணம் ஒன்று அதிபரினால் முறையாகப் பேணப்பட வேண்டும்.

- பாடசாலை விடுதிகளை நடாத்திச் செல்லல் சுகாதார அதிகாரிகளின் அறிவுரைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும். அது தொடர்பாக அதிபர்/ பிரதி அதிபர் அல்லது உதவி அதிபரின் கீழ் மேற்பார்வைக்குட்பட வேண்டும்.

- பாடசாலையை நடாத்திச் செல்லும்போது அவசர நிலைமையின்போது தொடர்பு கொள்வதற்குத் தேவையான தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தகவல்களைச் சேகரித்துத் தமது பணிமனையில் காட்சிப்படுத்தல், பாடசாலை முகாமைத்துவக் குழு மற்றும் சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்களை அறியச் செய்தல் (சுகாதார வைத்திய அதிகாரி, பாடசாலைக்குரிய பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொலிஸ் நிலைய அதிகாரி, அண்மித்த வைத்தியசாலை, கிராம அலுவலர், அம்புலன்ஸ் சேவை முதலிய தகவல்கள்)

- விசேட சந்தர்ப்பத்தில் 1390 அழைத்துத் தேவையான அறிவுரைகளைப் பெறுதல்

- நோயாளர் (ஓய்வு) அறையை அடிக்கடி கிருமியழிப்பு செய்து தூய்மையாகப் பேணல்

- பாடசாலைப்போசணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் வழங்குநர் தொடர்பாகப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி/ பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பரிந்துரையைப் பெற்ற பின்னர் உணவு வழங்கும் வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தல்.

- உணவு வழங்குநரின் வீடுகளில் எவராவது சுயதனிமைப்படுத்தலில் அல்லது இருமல், காய்ச்சல், தடிமன் போன்ற நோய்கள் அறிகுறிகள் காணப்படுமாயின் அது தொடர்பாகத் தாமதமின்றித் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். அவ்வாறான வீடுகளிலிருந்து உணவைக் கொண்டு வருதல் தவிர்க்கப்பட வேண்டும். அது போல, அது தொடர்பாகக் கண்காணிப்பு மேற்கொள்ள முறையான வேலைத்திட்டத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு மற்றும் வகுப்பறை முகாமைத்துவம்**

**கற்றல் கற்பித்தல் செயன்முறை மற்றும் வகுப்பறை முகாமைத்துவத்தின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயமாக அமைவது மாணவர்களிடையே சமூக இடைவெளியைப் பேணுவது மற்றும் முகக்கவசம் அணிவது உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடித்தலாகும்.**

- கீழ்க்காணும் வகையில் தனிநபர் இடைவெளியைப் பேணும் வகையில் வகுப்புகள் நடாத்தப்பட வேண்டும்

| | |
|---|---|
| 20 மாணவர்கள் வரை | தினமும் அனைத்து வகுப்புகளையும் நடாத்தல் |
| 21- 30 வரையான மாணவர்கள் | வகுப்பு மாணவர்களை இரு குழுக்களாக பிரித்து வாரம் விட்டு வாரம் வகுப்புகளை நடாத்துதல் (மாதத்தின் முதலாம் மற்றும் மூன்றாம் வாரம் என்ற முறையில்) |
| 40 மாணவர்களுக்கு மேல் | 20 கொண்ட குழுக்களாக பிரித்து சமமான தின எண்ணிக்கை அமையும் வகையில் வகுப்புகளை நடாத்தல் |

- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகுதியினரோடு கூடிய வகுப்பை நடாத்துவதற்கு ஏற்றவாறு நேரசூசியை தயாரித்துக்கொள்ளல்.

- இடைவெளியோடு கூடியதாக மாணவர்களை வைத்துக்கொள்வதற்கு ஏதுவாக பாடசாலையிலுள்ள அனைத்து வகுப்பறைகளையும் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தல்.

- மேலும், பாடசாலையில் பொது இடங்களைத் தெரிவு செய்து (பிரதான மண்டபம்/மாநாட்டு மண்டபம்) பரிந்துரைக்கப்பட்ட இடைவெளி மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி தயாரிக்கப்பட்ட நேரசூசியின் அடிப்படையில் அதிகமான மாணவர் எண்ணிக்கைக்கு ஒரே தடவையில் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

- வகுப்பறைகளை எப்போதும் நன்கு காற்றோட்டம் பெறும் வகையில் அமைத்துக் கொள்ளல் மற்றும் திறந்தவெளிகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்களை ஈடுபடுத்தல்

- மாணவர்கள்நேருக்கு நேர் முகம் நோக்கி இல்லாதவாறு வகுப்பறையில் அமரச்செய்வதற்கான முறையைத் திட்டமிடுதல்

## பாடசாலை இடைவேளை

- பாடசாலை இடைவேளையானது, அனைத்து மாணவர்களுக்கும் ஒரே நேரத்தில் கிடைக்காத வகையில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக அதிபரின் விருப்பின் அடிப்படையில் மற்றும் பாடசாலைக்குப் பொருந்தும் வகையில் தயார் செய்து கொள்ளமுடியும்.

- உணவு உண்ணும்போது முகக் கவசத்தை கழற்றுவதால் உணவு உணவு இடைவேளைக்கான நேரத்தைக் குறைப்பதற்கு பொருத்தமான ஏற்பாடுகளை செய்தல்.

- எப்பொழுதும் வீட்டிலிருந்து கொண்டுவரப்படும் உணவை உண்பதற்கு ஊக்குவிப்பதோடு, பாடசாலைக்கு வரும் வழியில் உணவு வாங்குவதைத் தவிர்க்கும்படி அறிவுறுத்தல் வழங்கி, அதுதொடர்பாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்.

- பாடசாலை இடைவேளையின்போது, மாணவர்களுக்கிடையே இடைவெளியைப் பேணுதல், முகக் கவசம் அணிதல் மற்றும் ஒருவரையொருவர் ஸ்பரிசம் செய்யும் விதத்திலான ஆபத்தான விளையாட்டுக்களில் ஈடுபடுவதை தவிர்த்தல் வேண்டும்.

## போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்துதல்

- நடந்து செல்லும் தூரம், துவிச்சக்கர வண்டியில் செல்லும் தூரம் அல்லது பெற்றோருடன் மோட்டார் சைக்கிலில் செல்லும் தூரத்தில் இருப்பின் நடந்து/ துவிச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிலில் பாடசாலைக்குச் செல்வது பாதுகாப்பானது.

- தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவதாயின் வாகன நெரிசல் ஏற்படாதவாறு பயன்படுத்துதல்.

- பொதுப் போக்குவரத்து அல்லது பாடசாலை பேரூந்து.்.  வேன் போக்குவரத்து சேவையினைப் பயன்படுத்துவதாயின், ஆசன எண்ணிக்கையில் மட்டும் பயணிக்கவும்.

- பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும்போது, வாகனத்திற்குள் ஏறும்போது மற்றும் இறங்கிய பின்னர் கிருமி நீக்கித் திரவங்களைப் பயன்படுத்தி கைகளை சுத்தம் செய்துகொள்ளல். வாய், மூக்கு மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்த்தல்.

- வாகனத்தில் குளிரூட்டியை (Air conditioner) பயன்படுத்தாது, ஜன்னல்களைத் திறந்து காற்றோட்டமாக வைத்திருங்கள்.

- வாகனத்திற்குள் முகக்கவசத்தைக் நீக்குதல் மற்றும் உணவு வகைகள் பரிமாற்றம் செய்வதைத் தவிர்க்கவும்.

- வாகனத்தில் ஏறிய பின்னர் உங்களுக்கு உரிய ஆசனத்தில் அமர்வதோடு, வாகனத்திற்குள் தேவையற்ற விதத்தில் நடமாடுவதைத் தவிர்த்தல்.

## சிற்றுண்டிச்சாலைகளைத் திறத்தல்

- மீள் அறிவித்தல்வரை பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகளைத் மூடி வைத்திருத்தல்.

## பாடசாலை விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்

- ஒருவரை ஒருவர் தொடாத விதமாக மற்றும் பொருட்களை பரிமாற்றம் செய்யாத தூரத்தைப் பேணும் விதத்தில் விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல். இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்களின் உடல் மற்றும் உள அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கும்.

- ஏனைய பாடசாலை விளையாட்டுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை மேற்கொள்வது குறித்து எதிர்காலத்தில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்

**கொவிட் 19 வைரஸ் தாக்கத்திலிருந்து தற்காத்துக்கொள்வதோடு, பாடசாலை மாணவர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவிசெய்வது ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் பொறுப்பாகும்.**

- பாடசாலை ஆரம்பிக்கப்படும் முதல் நாளில் மாணவர்களின் மனநிலையை மேம்படுத்தவும், கொவிட் 19 இன் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் வகையிலும் ஒரு அன்பான வரவேற்பினை அளித்தல்.

- மாணவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் யாவும் சகல ஆசிரியர்களுக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் செல்லுபடியாகும் அதேவேளை, கைகளைக் கழுவுதல், உடல் வெப்பநிலையைப் பரிசோதித்தல், முகக் கவசம் அணிதல் ஆகியன அவர்களுக்கும் கட்டாயமானதாகும்.

- அதிபரின் அறிவுறுத்தலின் பேரில், பாடசாலை சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான ஆசிரியரினால் நடைமுறைப்படுத்தப்படும் மேற்பார்வை வேலைத்திட்டத்திற்கு சகல ஆசிரியர்களும் முனைப்புடன் பங்குபற்றிப் பொறுப்பேற்க வேண்டும்.

- மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் உளநல ஆரோக்கியம் தொடர்பாகவும் கவனம் செலுத்தி, சமூக இடைவெளியைப் பேணி உளநல ஆரோக்கியத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

- பாடசாலைகயில் இருக்கும் காலப்பகுதியில் முகக்கவசம் அணிந்திருப்பதுடன், மாணவர்களின் முகக் கவசம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துதல்.

- விசேட தேவையுடைய மாணவர்களின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துதல்.

- கிருமிநீக்கி கரைசல்களை பயன்படுத்தும்போது அவற்றை பாதுகாப்பாக கையாளுவது பற்றி மாணவர்களை தெளிவூட்டுதல்.

- தொலைக்கல்வியோடு ஒப்படும்போது நேரடி பாடசாலைக் கல்வியூடாக நல்ல பெறுபெறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை பெற்றோருக்கு தெளிவூட்டுவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

## மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

**தற்கால சவால்களுக்கு முகங்கொடுத்து சுகாதாரப் பாதுகாப்பான முறையில் கல்வியை சிறந்த முறையில் தொடர்வது தங்களின் பொறுப்பாகும்.**

- பாடசாலைக்குள் பிரவேசிக்கும் போது, சவர்க்காரம் இட்டுக் கைகளைக் கழுவுதல் மற்றும் பாதணிகளைக் கிருமித் தொற்றுநீக்கத்திற்கு உட்படுத்துதல்.
- சமூக இடைவெளியைப் பேணுதல்.
- புத்தகங்கள், பேனைகள் போன்றவற்றைப் பகிர்வதைத் தவிர்த்தல்
- பாடசாலையில் இருக்கும்போது, முகக்கவசம் கட்டாயம் அணிதல் வேண்டும். மேலும் மேலதிக முகக்கவசம் ஒன்றை புத்தகப்பையில் வைத்திருத்தல்.
- உணவு அருந்தும் போது அல்லது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் தற்காலிகமாக முகக் கவசத்தைக் அகற்றி சுத்தமான பையொன்றில் வைத்தல் அல்லது அணிந்திருக்கும் சீருடையில் வைத்திருத்தல்.
- முகக்கவசங்களை ஒருபோதும் பொது இடங்களில் வைக்கக்கூடாது.
- உணவு அருந்தும் போது அல்லது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் தற்காலிகமாக முகக் கவசத்தைக் அகற்றிய பின்னர் மீண்டும் அணிய முன்னர் கைகளை நன்கு சுத்தமாக்கிக் கொள்ளல். மேலும் பிறரின் முகக்கவசங்களை ஒருபோதும் அணியக்கூடாது.
- வகுப்பறையிலிருந்து சென்று மீண்டும் வரும்போது அல்லது மேற்பரப்பு ஒன்றை தொட்ட பின்னர் கைகளை நன்கு கழுவிக்கொள்ளல் வேண்டும்.
- உணவு மற்றும் தண்ணீர் போத்தலை பகிரக்கூடாது
- பாடசாலையினுள் அல்லது பாடசாலைக்கு வெளியே ஒன்றுகூடுவதை தவிர்த்தல்
- பாடசாலை விட்டவுடன் உடனடியாக வீடு நோக்கி விரைதல்
- பாடசாலைக்கு வரும்போது மற்றும் வீடுகளுக்குச் செல்லும்போது பயன்படுத்தும் தனிப்பட்ட அல்லது பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் சுகாதார அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்தல்.
- தான் பயன்படுத்தும் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்த தகவல்களை வகுப்பாசிரியருக்கு வழங்குதல்
- தங்களுக்கு ஏதேனும் நோய், காய்ச்சல், சளி போன்ற நோய் அறிகுறிகள் காணப்படின், அந்நிலை குணமாகும் வரை பாடசாலைக்கு வருவதைத் தவிர்த்தல்.
- தங்கள் வீட்டில் யாரேனும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது கொவிட் 19 நோயாளியுடன் தொடர்புபட்டிருந்தால் சுகாதார அறிவுறுத்தல்களின் படி மீள அறிவிப்பு வரும்வரை பாடசாலைக்கு வராதிருத்தல்.
- பாடசாலையில் அல்லது அதற்கு வெளியில் தேவையற்றவிதத்தில் எப்பொருளையும் தொடுவதைத் தவிர்த்தல்.

## பெற்றோர்களுக்கான அறிவுறுத்தல்கள்

**தங்கள் பிள்ளைகளினதும் தங்களினதும் ஆரோக்கியத்திற்குப் பொறுப்பாக இருத்தல் மற்றும் பாடசாலையை சுகாதாரமான முறையில் வைத்திருப்பது அதற்கு உதவுவது பெற்றோரின் பொறுப்பாகும்.**

- இருமல், சளி அல்லது காய்ச்சல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்.
- வீட்டில் வேறு யாரேனும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்.
- வீட்டிலுள்ள ஒருவர் அல்லது பிள்ளைக்கு பீ.சீ.ஆர் பரிசோதனை/ துரித பிறபொருளெதிரி சோதனை (Rapid Antigen Test) செய்யப்பட்டிருந்தால் அவ் அறிக்கையின்படி சுகாதார அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறும் வரை பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்.
- தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் இருந்து ஏனைய பிரதேசங்களில் உள்ள பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பாதிருத்தல்.
- தங்கள் பிள்ளை பயன்படுத்தும் உபகரணங்கள் (பாடசாலைப் பை/ தண்ணீர்ப் போத்தல்/ சாப்பாட்டுப் பெட்டி/ புத்தகங்கள் போன்றன) சுத்தப்படுத்துதல் அல்லது வெயிலில் இட்டு உலர்த்துதல்.
- தினந்தோறும் பிள்ளையின் ஆடைகள் மற்றும் பாதணிகளைச் சுத்தம் செய்தல்.
- பாடசாலைக்குச் சென்று திரும்பியதும் பிள்ளையின் கைககளைக் கழுவுதல் மற்றும் பிள்ளையைச் சுத்தமாக இருக்கச் செய்தல்.
- பாடசாலை விட்டு வந்ததும் காலணிகளை வெளியே கழற்றிவிட்டு உள்ளே வருதல்
- பாவித்த முகக் கவசங்களை எரித்தல்
- வீட்டில் சமைத்த உணவுகளை மாத்திரம் பிள்ளைக்குக் கொடுப்பதோடு, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிள்ளை பயன்படுத்தும் பொருட்களை தனிப்பட்ட முறையில் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- பாடசாலை விட்டதும் பிள்ளையை வீட்டிற்கு வரும்படி அறிவுறுத்தல் வழங்குதல்/ அழைத்துக்கொண்டு வருதல்.
- பாடசாலைக்கு வரும்போது மற்றும் வீடுகளுக்குச் செல்லும்போது பயன்படுத்தும் தனிப்பட்ட அல்லது பொது போக்குவரத்துச் சேவைகளில் சுகாதார அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்குதல்.
- தங்கள் பிரதேசத்தில் சுகாதாரம் தொடர்பாக ஏதேனும் சிக்கல் இருந்தால் அது தொடர்பாக அதிபருக்கு அறிவிப்பதன் மூலம் பாடசாலைக்கு எற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் குறைக்க உதவுதல்.

## பொது அறிவுறுத்தல்

**இவ்விடயங்களை மேற்கொள்வது அதிபரின் பொறுப்பாகும்.**

- பாடசாலை அதிபரினால் பாடசாலை முன்னாயத்த செயற்பாடுகள் ஆலோசனைக் கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு அது பற்றி சம்பவத்திரட்டில் குறிப்பிடப்படல்.
- கொவிட் 19 பரவலைத் தவிர்ப்பதற்காக அதிபரின் தலைமையில் பாடசாலைச் சுகாதார மேம்பாட்டுக் குழுவை முனைப்பாக முன்னெடுத்தல் மற்றும் சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பான பிரதி அதிபர்/ ஆசிரியரொருவரின் தலைமையில் தொடர்ச்சியாகக் கண்காணிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- கொவிட் 19 பரவலைத் தவிர்க்கும் வேலைத்திட்டத்துக்காக கல்வி அமைச்சின் தலையீட்டில் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதி, பொருட்கள் அல்லது உபகரணங்கள் தொடர்பாக மற்றும் பாடசாலையை பாதுகப்பாக ஆரம்பித்தல் தொடர்பில் பெற்றுக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் தொடர்பாக உரியவாறு பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களை அறியச் செய்வதினூடாக அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தல்.
- பாடசாலையை ஆரம்பிக்க முன்னர் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வதற்காக மேற்கொண்ட ஆவணங்களைப் பூர்த்திசெய்து அதிபரின் கையொப்பத்துடன் கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைப்பதுடன் அதன் பிரதிகளைப் பாடசாலையில் வைத்திருத்தல் (இணைப்பு 01)
- கொவிட் 19 நோய்யறிகுறி காணப்படும் பிள்ளையொன்று இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் அவரை நோயாளர் அறைக்கு அனுப்பி உடனடியாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியூடாக வலய மட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும் பிள்ளை நோய்.்.சரும நோய் தொடர்பான வைத்திய நிபுணரிடத்தில் காண்பித்தல் வேண்டும் (பின்னிணைப்பு 3) பிள்ளைக்கு அவசர சிகிச்சை தேவை என உணரும் சந்தர்ப்பத்தில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.
- பாடசாலையை ஆரம்பித்த பின்னர் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொண்ட மதிப்பீட்டு ஆவணங்களை அன்றாடம் பூர்த்தி செய்யும் பணியை ஆசிரியர்களிடம் ஒப்படைத்து வாரத்துக்கு ஒரு தடவை அதிபரின் கையொப்பத்துடன் கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்குதலும் பிரதிகளைப் பாடசாலையில் வைத்துக்கொள்ளலும் (இணைப்பு 02)
- மாணவர்களை சுகாதாரப் பாதுகாப்புடன் பாடசாலைக்கு அனுப்பும்போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகப் பெற்றோர்களை தெளிவூட்டுவதற்கு திட்டமொன்றை உருவாக்குதல்
- இருமல், தடிமன் அல்லது காய்ச்சல் போன்ற நோயறிகுறிகள் இருக்குமாயின் அல்லது வீட்டில் வேறொரு உறுப்பினர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பின் அல்லது குடும்ப உறுப்பினரின் அல்லது பிள்ளையின் பி.சீ.ஆர் பரிசோதனை/ துரித

பிறபொருளெதிரிப் பரிசோதனை (Rapid Antigen Test) மேற்கொள்ளப்பட்டிருப்பின் அந்த அறிக்கைக்கு அமைய சுகாதார அறிவுறுத்தல் பெற்றுக் கொள்ளப்படும் வரை பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாமெனப் பெற்றோர்களை அறிவுறுத்தல்

- சுகயீன நிலை காரணமாக வீட்டில் தங்கியிருக்கும் மாணவர்களுக்காக அன்றாட கல்வி நடவடிக்கைகள் தவறவிடப்படாதவாறு முறைமையொன்றைத் தயார் செய்வதினூடாக பிள்ளையை வீட்டிலேயே தங்கியிருக்கச் செய்யப் பெற்றோர்களைத் தூண்டுதல்
- பாடசாலைக்கு மாணவர்கள் வரும் வண்டிகள் மற்றும் வேன்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரித்துக்கொள்வதற்கான திட்டமொன்றைத் தயார்செய்தல்
- அடிக்கடி பயன்படுத்தும் பொருட்களைத் தொற்றுநீக்கம் செய்தல், கைப்பிடிகள், கதவுத் திருகிகள் என்பவற்றை அடிக்கடி தொற்றுநீக்கம் செய்வதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

## பொது அறிவுறுத்தல்

**பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும்போது ஆலோசனை ஆசிரியரின் வகிபாகம்**

**கொவிட் 19 பரவல் நிலைமையின்கீழ் பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும்போது மிக முக்கிய பொறுப்பு ஆலோசனை ஆசிரியர் மீது சாட்டப்பட்டிருக்கிறது. அதற்கமைய கல்வி அமைச்சின் ஆலோசனை ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பான 6/2013 " பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்" சுற்றுநிருபத்துக்கு அமைய சகல பாடசாலைகளிலும் முழுநேர அல்லது பகுதி நேர ஆலோசனை ஆசிரியரொருவர் நியமிக்கப்படல் வேண்டும். அவரின் பிரதான கடமைப் பொறுப்புகள் கீழே தரப்பட்டள்ளன.**

- நீண்ட காலம் வீட்டிலிருந்து மன அழுத்தத்துக்குள்ளாகி வரும் மாணவர்களை கனிவுடன் வரவேற்பதற்காக பாடசாலை அதிபர் மற்றும் சக ஆசிரியர்களுடன் இணைந்து வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்
- பாடசாலை மாணவர்களின் உளவியல் சமூக நன்னடத்தையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ள உளவியல் சமூக செயற்பாடுள் கையேட்டுக்கு அமைய நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்
- அந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு சமாந்திரமாக பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் உளவியல் சமூக அபிவிருத்திக்கான நிலைபேரான திட்டமொன்றை செய்தல்.
- பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் பாடசாலைக்கு வரும் மாணவர்களை இனங்கண்டு தேவையான தலையீடுகளை செய்தல்.
- ஆபத்தான சுபாவம்கொண்ட பிள்ளைகளை இனங்கண்டு அவர்களை நேர்வழிபடுத்துவதற்குத் ஆலோசனை ரீதியான தலையீட்டினை செய்வதுடன் தேவையானபோது நிபுணத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ளல்.
- போதைப்பொருள் பாவனைக்கு பழக்கப்பட்டிருக்கும் மாணவர்களை இனங்காண்பதற்கு பொருத்தமான திட்டமொன்றை தயாரித்தல். அவர்களை அந்நிலைமையிலிருந்து மீட்டெடுப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கல். மேலும் தேவையானபோது நிபுணத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ளல்
- மாணவர்களின் பிரச்சினைகளை உளவில் விஞ்ஞான முறைமை ரீதியில் அணுகுவது தொடர்பாக சக ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமாக அது தொடர்பில் அவர்களது கவனத்தை திருப்புதல்
- பாடசாலையில் ஆலோசனை பிரிவை திட்டமிட்ட அடிப்படையில் நடாத்திச் செல்லல் மற்றும் பிரச்சினையுள்ள மாணவர்கள் தன்னை நோக்கி வரும்விதமான திட்டமொன்றை தயாரித்துக்கொள்ளல்.

**பாடசாலை மாணவர்களை அழைத்து வரும் பேரூந்து, வேன் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான அறிவுரைகள்**

- இருவர் அமரும் ஆசனங்களில் எப்போதும் இருவரை மாத்திரம் அமரச்செய்தல் மேலும் ஆசனங்களின் எண்ணிக்கைக்கமைவாக மாத்திரம் மாணவர்களை அழைத்து வருதல்.
- பாடசாலை வாகனங்களில் மாணவர்கள் ஏறும் போதும் இறங்கும்போதும் கைகளை சுத்தப்படுத்திக் கொள்வதற்காக தொற்றுநீக்கி திரவங்களை வைத்தல்.
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட வாகனமாயின் மாணவர்களை அழைத்து வரும் போது குளிரூட்டியை நிறுத்தி யன்னல்களை திறந்து காற்றோட்டம் கிடைக்கப்பெறச் செய்தல்.
- மாணவர்கள் வாகனத்தினுள் முகக்கவசங்களை அகற்றல், உணவுகளை பரிமாறல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடாதிருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தினமும் ஒரே மாணவர் குழுவினை அழைத்துவருதல். ஒரே பாடசாலை மாணவர்களை ஒரு வாகனத்தில் அழைத்துவருதல்.
- வாகனத்தில் தினமும் வருகை தரும் மாணவர்களின் தகவல்களைப் பேணிவருதல்.
- தினமும் வருகை தரும் மாணவர்களை பதிவு செய்யும் இடாப்பு ஒன்றை பேணுதல்.
- பாடசாலை மாணவர்கள் வரும் வாகனங்களில் வெளி ஆட்களை அழைத்துவராதிருத்தல்.
- காலையில் மாணவர்கள் வாகனத்தில் ஏறும் போது அவர்களுக்கு ஏதேனும் சுகவீன நிலைமை இருக்கின்றதா என கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலிருக்கும் மாணவர்களை அழைத்துவராதிருத்தல்.
- காலையில் மாணவர்கள் வாகனத்திலிருந்து இறங்கிச் சென்றதன் பின்னர் வெளி ஆட்களை வாகனங்களில் ஏற்றாதிருத்தல்.
- வாகன சாரதி மற்றும் நடாத்துனர் எப்போதும் முகக்கவசங்களை அணிந்திருத்தல்.
- தினமும் காலையில் மாணவர்கள் வாகனத்தில் ஏறும் முன்னரும் மாலையில் ஏறும் முன்னரும் அடிக்கடி தொடுகைக்கு உட்படும் இடங்களை முறையாக சுத்தப்படுத்தல்.
- அவசர நிலைமைகளின் போது அழைப்பதற்கான தொலைபேசி இலக்கங்களை வாகனங்களில் காட்சிப்படுத்தல்.
- கோரோனா நோய் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் பிரதேசங்களிலிருப்பவர்களை பணியில் அமர்த்தாதிருத்தல்.
- இயன்றவரையில் ஒரே சாரதி மற்றும் நடாத்துனரைக் கொண்டு சேவையை வழங்குதல்.
- சரியான தகவல்களை வழங்காத பணியாளர்களை வேலைக்கமர்த்தாதிருத்தல்.
- தினமும் பணியாளர்களை மாற்றாதிருத்தல்.
- சாரதி அல்லது நடாத்துனர் சுகயீனமுற்றிருப்பின் அவர்களை பணிக்கமர்த்தாதிருத்தல்.
- சாரதி, நடாத்துனர் காலையில் வாகனத்தில் ஏறும் முன்னர் அவர்களது உடல் வெப்பநிலையை பரீட்சிப்பதற்கான நடைமுறையை உருவாக்கல்.
- சாரதி மற்றும் நடாத்துனர் வெற்றிலை மெல்லுவதற்காக முகக்கவசங்களை அகற்றாதிருப்பதற்கான அறிவுரைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- முச்சக்கர வண்டிகளில் சமூக இடைவெளி பேணத்தக்க முறையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள எண்ணிக்கையிலான மாணவர்களை மாத்திரம் அழைத்து வருதல்.
- சேவையில் ஈடுபடும் பாடசாலை போக்குவரத்துச் சேவை சாரதிகள் மற்றும் நடாத்துனர்கள் பூரணமாக தடுப்பூசியை பெற்றிருத்தல் வேண்டும்.